[2014 ஆகஸ்ட் 1

310—

புதிய கட்டடம்

*34421—திரு. ஆ. ராமசாமி:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, குல்லுசெட்டிப்பட்டி ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தொகுதி, குல்லுசெட்டிப்பட்டி ஊராட்சியிலே கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்று கேட்டிருக்கின்றார்கள். மேற்படி ஊராட்சியிலே கால்நடைக் கிளை நிலையம்தான் செயல்பட்டு வருகிறது. எதிர்காலத்திலே அங்கே கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாகி, கால்நடை மருந்தகமாக அது தரம் உயர்த்தப்படும்போது அங்கே ஒரு கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.*

திரு. ஆ. ராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் விதி 110-ன்கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின சமுதாயத்தைச் சார்ந்த 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியருக்கு தொழில்நுட்பக் கல்வி அளிப்பதற்காக 24 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் தொழிற்கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் 10 ஆம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியர் தொழிற்பயிற்சி பெற 10 கோடி ரூபாய் செலவில் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. அதேபோன்று மலைப் பகுதிகளில் உள்ள பழங்குடியினர் நல விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மழைக் காலங்களில் அவர்கள் நனையாமல்*

செல்ல ரெயின்கோட் 2 கோடி ரூபாய் செலவிலும், குளிர் காலங்களில் உடல் நலத்தைக் காக்க 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் கம்பளிச் சட்டையும் வழங்கிட அறிவிக்கப்பட்டது. மக்களின் சக்தியே நீங்கள்தான் அம்மா! மக்களின் வெற்றியே நீங்கள்தான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றிதான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) 2016–லும் உங்களுக்கு வெற்றிதான் அம்மா! வெற்றி, வெற்றி என்று சொல்லி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், இன்றையதினம் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் வேண்டுமென்று கேட்டதற்கு, கட்டித் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 311, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

311—

விற்பனை நிலையம்

***18863—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, விஜயநகரம் பகுதியில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, விஜயநகரம் பகுதியில் கைத்தறி விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள்.